**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.274/2024</u>**

பெயர் : கந்தசாமி த/பெ. பரமசிவம் நாள் : 29.06.2026

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

செங்கோட்டையன் தாக்கல் செய்த எதிர்வாதத்தில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து முழுவதும் புறம்போக்கு தடம் ஆகும், அதற்கு ஆவணம் இல்லை என்று எதிர்வாதம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. தாவா சொத்து விபரத்தில் எத்தனை தாக்குகள் மற்றும் எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. இந்த வழக்கில் கோவில் சார்பாகத்தான் எதிர்வாதம் செய்வதாகத்தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் தனிப்பட்ட உரிமையின் அடிப்படையில் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான், கோவிலுக்கு செல்ல ஊர்மக்கள் அனைவருக்கும் தடம் வேண்டும் என்ற அடிப்படையில் தான் எதிர்வாதம் செய்கிறோம்.

2. எதிர்வாதத்தில் கோவிலில் என்ன சாமி உள்ளது என்ற விபரம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த கோவில் அமைந்துள்ள இடம் ஆறுமுகம் மற்றும் அவரது சகோதரர் இறந்துபோன இளையப்பன் ஆகியோர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட பட்டா பூமி என்றால் சரிதான். மேற்படி கோவில் அமைந்துள்ள இடம் தனிப்பட்ட இருவருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை எங்கள் எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவில் என்ன சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் உள்ள சாமி வெங்கடேச பெருமாள் சாமி ஆகும்.

3. மேற்படி கோவில் எங்கள் சமூகத்தினருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் பொதுமக்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் வருவார்கள். வாதியின் தாவா சொத்திற்கும் மேற்படி கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும். தாவா சொத்தினை அடுத்து 3ம் நபர்களின் சொத்துக்களை கடந்து தான் கோவிலுக்கு செல்ல முடியும் என்றால் இல்லை, நேராக கோவிலுக்கு தான் செல்லும். தாவா சொத்தில் சுற்றிலும் பழங்காலத்து கற்கள் வைத்து சுவர் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கோவிலில் இருந்து எனது வீடு எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் அரைகிலோமீட்டர் தள்ளி ஊருக்குள் உள்ளது. மற்ற பிரதிவாதிகள் வீடுகள் எங்குஅமைந்துள்ளது என்றால் ஒரு கிலோமீட்டர், அரை கிலோமீட்டர் தொலைவில் தான் உள்ளார்கள்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.29 16:57:24 +0530

4. இறந்துபோன இளையப்பன் அவரின் வாரிசுகள் யார் யார்கள் தற்போது உள்ளார்கள் என்றால் பாப்பாத்தி என்று ஒரு வாரிசு உள்ளார். மேற்படி தனிநபர் பெயரில் உள்ள பூமியில் உள்ள கோவிலில் எங்களுக்கு உரிமை உள்ளது என்பதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் வரவு செலவு மற்றும் கோவில் நிர்வாகம் அனைத்தும் நான் மற்றும் எங்கள் குடும்பம் தான் பார்த்து வருகிறேன். மேற்படி கோவில் கட்டி 5 வருடம் ஆகிறது. நான் மேற்படி கோவிலில் பொறுப்பில் உள்ளேன் என்பதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. 5 வருடத்திற்கு முன்பாக செங்கோட்டையன் மற்றும் அவரது சகோதரர்களுக்கு கோவிலுக்கு செல்வதற்காக மற்றொரு வழி உள்ளது என்றால் வேறு வழி இல்லை, இது மட்டும் தான் தடம் ஆகும். கோவில் உள்ள பட்டா பூமியில் ஆறுமுகம், இளையப்பன் ஆகியோர்களுக்கு மொத்த விஸ்தீரணம் எவ்வளவு உள்ளது என்றால் தெரியாது.

5. இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிர்வாதம் செங்கோட்டையனால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், 2ம் பிரதிவாதி ஆறுமுகம் கையெழுத்து செய்யவில்லை என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் கையெழுத்து செய்யவில்லை. இளையப்பனின் வாரிசான மகள் பாப்பாத்தி என்பவரை விசாரித்தால் கோவில் சம்பந்தமான உண்மை தெரியும் என்றால் சரிதான், ஆனால் பாப்பாத்திக்கும், ஆறுமுகத்திற்கும் சொத்து பிரச்சனை உள்ளதால் அவரது சாட்சியம் தவறாகக்கூட இருக்கலாம். ஆறுமுகத்தை தவிர எங்கள் யாருக்கும் பாப்பாத்தியுடன் விரோதம் இல்லை. அதனால் பாப்பாத்தியை விசாரணை செய்வதற்கு எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

6. தாவா சொத்து சம்பந்தமான வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆறுமுகம் சாட்சியளிக்காமல் உள்ளதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் அவர் உடல்நிலை சரியில்லாததால் வரஇயலவில்லை. வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்து ஊர்நத்தம் என்றால் சரிதான். மேற்படி நத்தம் புறம்போக்கில் வாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்று தான் நாங்கள் வருவாய் துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தோம் என்றால் சரிதான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக புகார் அளித்தோம். மேற்படி புகாரின்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் மொடக்குறிச்சி வட்டாட்சியர் அவர்களும், வருவாய் ஆய்வாளர் அவர்களும், கிராமநிர்வாக அலுவலரும் வந்து ஆக்கிரமிப்பினை அகற்றிவிட்டு சென்றார்கள்.

7. அவ்வாறு ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், மேற்படி அதிகாரிகள் கிராம நத்தம் புறம்போக்கு பொருத்தவரையில் அனுபவிக்கும் நபருக்கு தான் பாத்தியம் என்றும், அவ்வாறு ஆக்கிரமிப்பினை அகற்றவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார் அளித்தற்கும் அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பதற்காக எந்தவிதமான ஆவணங்களும்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.29 16:57:29 +0530

தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. மேற்படி நத்தம் புறம்போக்கினை கோவிலுக்கு செல்ல பாதை என ஊர்ஜிதம் செய்தோ அல்லது உட்பிரிவு செய்து கொடுக்கவேண்டும் என ஊர்பொதுமக்கள் சார்பாக மனு ஏதாவது அளிக்கப்பட்டதா என்றால் இல்லை, காலம் காலம் சென்றுவந்ததால் அதன் அடிப்படையில் உரிமை கோரியுள்ளோம். கோவிலுக்கு செல்வதாக சொல்லும் தடத்தின் நீள அகலம் எவ்வளவு என்றால் ஆலுச்சாம்பாளையம் ஊரில் இருந்து பெருமாள் கோவில் வரை செல்லும் தடம் சுமார் 1-1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும், முதல் 500 மீட்டரில் 30 அடி அகலம் உள்ள ரோடும், அதனை தொடர்ந்து 15 அடி அகலமாக கோவிந்தசாமி வீட்டில் இருந்து கோவிலுக்கு செல்லும் இடம் வரை 8 - 9 அடி அகலம் உள்ளது.

8. கோவிந்தசாமி வீட்டிற்கும் கோவிலுக்கும் இடையில் தான் வாதியின் இடம் உள்ளது என்றால் கோவிந்தசாமி வீட்டிற்கு மேல்புறம் புறம்போக்கு நிலம் உள்ளது, அதற்கு அடுத்து வாதியின் இடம் உள்ளது. கோவிலுக்கு செல்லும் தடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக எதிர்வாதம் செய்துள்ள நாங்கள் மேற்படி எதிர்வாதத்தில் தடத்தின் நீள, அகலம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்வாதத்தில் கூறியபடி தடம் எவ்வளவு அகலம் அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட ஆணையர் நியமித்து பார்வையிட மனு ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வாதியின் வீடு உள்ள இடத்தில் நான் சொல்லும் அகலத்தில் தடம் எதுவும் செல்லவில்லை என்றும், வாதியின் இடத்தை ஆக்கிரமிக்க வேண்டிய தடம் உள்ளதாக பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் சொல்லும் கோவிலுக்கும், வாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், கோவிலின் பெயரை சொல்லி வாதியின் இடத்தை அபகரிக்க வேண்டி, வாதியின் அனுபவித்திற்கு இடையூறு செய்து வாதிக்கு எதிராக நாங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல.

9. நாங்கள் சொல்வது உண்மையாக இருந்திருந்தால் என்ன கோவில் என்றும், அதன் விஸ்தீரணம் பற்றி தெளிவாக குறிப்பிட்டு எதிர்வாதம் தாக்கல் செய்திருப்போம் என்றும், எனவே இது பொய் வழக்கு என்றால் நாங்கள் ஊர்பொதுமக்கள் தாக்கல் செய்ததால் மேற்படி எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனாம், இது பொய் வழக்கு இல்லை. எங்கள் தரப்பில் ஆவண சாட்சிய எதுவும் இல்லை என்றால் ஆவண சாட்சி இல்லை, நடைமுறை அனுபவ அடிப்படையில் பொதுமக்கள் என்ற வகையில் உரிமை கோருகிறோம். தாவா சொத்து நத்தமாக வகைப்பாடு செய்துள்ள நிலையில் அதனை யார் அனுபவிக்கிறார்களோ அவர்களோ உரிமையாளர் என்ற விபரம் தெரியுமா அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் நாங்களும் பயன்படுத்தி வருகிறோம், அதனால் வாதி உரிமையாளர் கிடையாது, அவரிடம் பட்டா, ஆவணம் எதுவும் இல்லை. தடமாகத்தான் உள்ளது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.29 16:57:34 +0530

10. நான் சொல்வது போல் கோவில் பழங்காலமாக உள்ளது என்று எதிர்வாதத்தில் சொல்லியுள்ள்ள நிலையில், தற்போது நான் 5 வருடத்திற்கு முன்பு தான் கோவில் கட்டப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல, கோவில் பழமையானது என்பதால் வருவாய்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று குறிப்பிட்டுள்ளோம். மேற்படி விபரத்தை எங்களது எதிர்வாதத்தில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. வாதி தனது வழக்கில் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்து தாவா சொத்தில் அவரது அனுபவத்தையும், உரிமையும் நிரூபணம் செய்துள்ளதால் வாதியை நாங்கள் தொந்தரவு செய்வதற்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது என்றும், எங்கள் எதிர்வாதம் சங்கதிகளின் மூலமான நிரூபணம் ஆனதால் இந்த வழக்கு அனுமதி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. ஆறுமுகத்தை தவிர மற்ற பிரதிவாதிகளுக்கு மேற்படி கோவிலுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், நாங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக வாதிக்கு எதிராக எதிர்வாதம் செய்கிறோம் என்றால்சரியல்ல. வாதியின் மகனும், நானும் சென்டரிங் தொழில் தான் செய்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி தொழிலில் ஏற்பட்ட விரோத்தின் காரணமாக பொய்யாக எதிர்வாதம் வாதிக்கு எதிராக செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் ஆவணமும் இல்லாமல் நான் அளிக்கும் சாட்சியம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.29 16:57:38 +0530